சிற்றிலக்கியங்களில் இயற்கை வளம் குறித்த செய்திகள்

முனைவர் மோ. மோஷாலீனு
உதவிப் பேராசிரியர்
அருணாச்சலா கலை மற்றும் அறிவியல் பெண்கள் கல்லூரி, வெள்ளிச்சந்தை
DOI: https://doi.org/10.5281/zenodo.19220529

முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என இரு வகையாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. அறம், பொருள், இன்பம், வீடுபேறு எனும் நான்கு உறுதிப்பொருள்களுள் ஒன்று அமையப்பாடுவது சிற்றிலக்கியமாகும். சிற்றிலக்கியங்களில் இயற்கை மற்றும் சுற்றுச்சுழல், மனித வாழ்வோடு இயைந்த தெய்வீக, அழகியல் மற்றும் வாழ்வியல் கூறுகள் இடம் பெறுகின்றன. சிற்றிலக்கியங்களில் இடம்பெறும் இயற்கை வளம் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

இயற்கை வளம்

இயற்கை வளங்கள் சுற்றுச்சுழலிலிருந்து நன்கொடைகளாக கிடைக்கக்கூடியது. இவை பெரும்பாலும் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவையும், தேவைகளுக்குப் பயன்படக் கூடியவையாகவும் காணப்படுகின்றன. நிலம், நீர், காற்று, காடுகள், சுரிய ஒளி, மூலப்பொருள்கள், கச்சாப் பொருட்கள் போன்றவை இயற்கை வளங்கள் எனலாம். மனித குலத்தின் உயிர்நாடியாக இயற்கை வளங்கள் செயல்படுகின்றன.

சிற்றிலக்கியங்களில் இயற்கை

குறவஞ்சி, தூது, உலா, பரணி, பள்ளு போன்ற இலக்கியங்களில் சோலை, புங்கா, பொய்கைகள் மற்றும் காலநிலை மாறுபாடுகள் வர்ணிக்கப்பட்டு, இயற்கையைத் தெய்வமாக வழிபடும் சுழலைக் காண முடிகின்றது. இயற்கை சார்ந்த வாழ்வு முறைக்குச் சொந்தக்காரர்கள் பழந்தமிழர்கள் என்பதை இலக்கியங்களின் வழி உணரலாம்.

சிற்றிலக்கியங்களில் ஐவகை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை போன்ற நிலப்பரப்பின் சிறப்பியல்புகளைச் சித்தரிக்கின்றன. நிலங்களிலுள்ள தாவரங்கள், பறவைகள், விலங்குகள், வளர்ச்சிகள், செழிப்புத் தன்மை, நீர் வளம் ஆகியவற்றைக் குறிப்பிடுவதோடு மக்களின் வாழ்வியல் செய்திகளையும் சிற்றிலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. தூது மற்றும் உலா இலக்கியங்களில் இறைவன் அல்லது தலைவனைப் புகழும்போது தென்றல், மாலை, குயில், அன்னம், மேகம் போன்ற இயற்கையின் அழகையும், மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவையும் வெளிப்படுத்தி உள்ளனர்.

குறவஞ்சி

குறவஞ்சிகளில் முதன்மையானது திருக்குற்றாலக் குறவஞ்சி. திருக்குற்றாலக் குறவஞ்சியில் மலை வாழ் மக்கள் வாழ்வியல் குற்றால மலை சார்ந்த உயிரினங்கள் முதலான செய்திகளைப் பதிவு செய்துள்ளது.

குற்றாலத்தின் மலை வளம்

"எங்கள் மலையே" எனும் பகுதியில்,
"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்

மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனல் இளம்பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே"
(பாடல் 54:1)

என்ற இப்பாடலடிகள் விளக்குகின்றன.

குற்றால நாதரின் பெருமைகளைப் பாடி வரும் குறத்தியை வசந்த வல்லி (தலைவி) பார்க்கின்றாள். மகிழ்ச்சியோடு குறத்தியை அழைத்து அவள் மலை வளத்தைக் கூறுமாறு கேட்கிறாள்.

ஆண் குரங்குகள் பலவகையான பழங்களைப் பறித்து பெண் குரங்குகளுக்குக் கொடுத்துக் கொஞ்சுகின்றன. அவற்றுள் சில பழங்களைப் பெண் குரங்குகள் சிதறுகின்றன. அந்தப் பழங்களைத் தேவர்கள் இரந்து கேட்கின்றனர். வேடர்கள் தேவர்களைத் தம் கண்களால் ஏறெடுத்துப் பார்த்து அழைக்கின்றனர். வானத்தில் செல்ல வல்ல சித்தர்கள் மூலிகைகளை வளர்க்கின்றனர். மலையிலுள்ள அருவியின் அலைகள் எழுந்து வானத்தில் வழிந்து ஓடுகின்றன. இதனால் சுரியனின் குதிரைகளுடைய கால்களும் தேர்ச் சக்கரங்களும் வழுக்கி விழுகின்றன. இத்தகைய சிறப்புகளை உடையது குற்றாலமலை எனத் திரிகூடஇராசப்பக் கவிராயர் விளக்குகிறார்.

நாட்டு வளம் கூறுதல்

குறத்தி தன்னுடைய நாட்டின் வளங்களைப் பற்றி கூறலானாள்.

"ஓடக் காண்பது பும்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்குல்
வருந்தக் காண்பது சுலுளைச் சங்கு
போடக் காண்பது புமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
திருக்குற்றாலர் தென் ஆரிய நாடே"
(பாடல் 56:9)

இப்பாடலில் குறத்தி தன் நாட்டு வளங்களைத் குறித்து பலவாறு கூறுகின்றாள். எங்கள் நாட்டில் ஊரைத் துறந்து ஓடுவது ஆற்றுவெள்ளம், ஒடுங்கிக் கிடப்பது யோகிகளின் உள்ளம், வாடி இளைத்திருக்கக் காண்பது பெண்களின் மின்னல் இடை, வருந்தியிருப்பது முத்துக்களை ஈனும் சங்கு, நிலத்தில் போடுவது நெல்விதை. புலம்புவது பெண்களின் கிண்கிணிச் சிலம்புகள், தேடுவது நல்லறத்தையும் புகழையுமே என்று கூறுகிறாள். எனவே இயற்கை வளம் நிறைந்த தன் நாட்டில் வாடுவோரும் வருந்துவோரும் கிடையாது, எல்லோரும் மகிழ்வுடன் வாழ்கின்றனர் என்கிறாள்.

பள்ளு

பள்ளு சிற்றிலக்கிய வகைகளில் குறிப்பிட தகுந்த நூல் முக்கூடற்பள்ளு. உழவுத் தொழிலில் ஈடுபட்ட பள்ளர்களின் வாழ்க்கையை விளக்கிக் கூறும் இலக்கியம். உழவர்கள் பற்றிய செய்திகளும், உழவுத் தொழிலுக்கு அடிப்படையான (நெல் வகைகள்) வித்து, மாடுகளின் குணம், ஏர் (கலப்பையின் வகைகள்) ஆகியன பற்றிய விரிவான விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

மழை அறிகுறிகள்

மழை வருவதற்கான அறிகுறிகளை இயற்கையைச் சார்ந்த பதிவுகளோடுக் குறிப்பிட்டுள்ளது என்பதை,

"ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்றுதே குறி - மலை
யாள மின்னல் ஈழ மின்னல்
சுழ மின்னுதே
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக்
காற்று அடிக்குதே - கேணி
நீர்ப்படு சொறித் தவளை

கூப்பிடுகுதே
சேற்று நண்டு சேற்றில் வளை
ஏற்று அடைக்குதே – மழை
தேடி ஒருகோடி வானம்
பாடி யாடுதே"

(முக்இ பள்ளு பாடல் – 30)

என்று இப்பாடல் எடுத்துரைக்கிறது.

பண்டைத் தமிழர் காற்று, மின்னலின் தன்மையையும் உயிரினங்களின் செயல்பாடுகளையும் கொண்டு மழையின் வரவை ஊகித்து உணர்ந்து அறிந்தனர்.

தென்மேற்குத் திசையிலே மலையாள மின்னல் மின்னிக் கொண்டுள்ளது. தென்கிழக்குத் திசையிலே ஈழத்து மின்னல் மின்னிக் கொண்டுள்ளது. நேற்றும் இன்றும் மரக்கொம்புகளைச் சுற்றியவாறு காற்று அடிக்கிறது. கிணற்றிலே உள்ள சொறித் தவளைகள் கூப்பாடு போடுகின்றன. நண்டுகள் தம் வளைகளுள் மழைநீர் புகுந்து விடாதபடி வாயில்களைச் சேற்றினால் அடைக்கின்றன. மழை நீரைத் தேடி கோடி வானம்பாடி பறவைகள் அங்கும் இங்கும் பறக்கின்றன. இவ்வாறு மழை வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

வான் முட்டும் வளம்

முக்கூடல் மற்றும் மருதூர் ஆகிய ஊர்களின் செழிப்பை நகர்வளம் என்ற பகுதியில் ஆசிரியர் மிக அழகாக வருணித்துள்ளார்.

"கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டம் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம்விளை யாடும்
விண்ட புமது வண்டலிட்டு ஓடும்
வெயில் வெய்யோன் பொன்னெயில் வழி தேடும்
அண்டர் நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊர் எங்கள் ஊரே"

(பாடல் : 19)

முக்கூடலின் இயற்கை வளத்தை இப்பாடல் மூலம் அறியலாம்.

மேகங்கள் வானளாவிய கோபுரங்களின் அருகே வந்து கூடும். கோயிலில் பறக்கும் கொடிகள் வானத்தை மறைக்கும் அளவுக்கு நெருக்கமாக இருக்கும். தங்கமயமான முற்றங்களில் அன்னப்பறவைகள் விளையாடும். மலர்களிலிருந்து வழியும் தேன், ஆற்று வண்டல் போலப் பெருக்கெடுத்து ஓடும். மதில்கள் மிக உயரமாக இருப்பதால் கதிரவன் உள்ளே நுழைவதற்கு வழி தேடும் என்று முக்கூடலின் வளத்தைக் கற்பனை நயம்பட உரைத்துள்ளார்.

மருதூரின் இயற்கை எழில்

மருதூரின் இயற்கை அழகை வருணித்துள்ளார். சங்கு புச்சிகள் மேடை எங்கும் ஊர்ந்து திரியும். அலைகளில் உள்ள மீன்கள் பொன்னான அரங்குகளில் தாவும். நிலவானது சோலையில் உள்ள உயரமான மரங்களை உரசிச் செல்லும். தெருக்கள் தோறும் நறுமணம் வீசும். சோலைகளில் இளம் கிளிகள் தங்கும். மாடங்களில் புறாக்கள் கூவும் என்பதை,

"சங்கம் மேடைகள் எங்கும் உலாவும்
தரங்க மீன்பொன் னரங்கிடை தாவும்
திங்கள் சோலை மரங்களை ராவும்
தெருக்கள் தோறு மருக்களைத் தூவும்
பொங்க ருளிளம் பைங்கிளி மேவும்
புவை மாடப் புறாவினங் கூவும்"

(முக்.பள்ளு பாடல்: 20)

என்கிறது முக்கூடற்பள்ளு.

முடிவுரை

இயற்கை வளம் நிறைந்த காட்சிகளைக் கற்பனை நயத்தோடு சிற்றிலக்கியங்களில் திறம்படகாட்சிஅமைத்துள்ளனர். இயற்கை மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. சுற்றுச்சூழலுக்கு எதிரான செயல்பாடுகள் அனைத்தும் மனித குலத்திற்கு எதிரான செயல்கள் என்பதை ஒவ்வொரு

தனிமனிதனும் உணர வேண்டும். இதை உணர்ந்து இயற்கையைப் பேணி பாது காத்து இயற்கையோடு இயைந்து வாழ்வது நமக்கு மட்டுமல்லாது நம் எதிர்கால சமூகத்திற்கும் நல்ல பயன் விளைவிப்பதாய் அமையும். பண்டைத் தமிழர் மட்டுமல்ல தற்போதைய சமுதாயமும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்கின்றனர் என்பதற்குச் சிற்றிலக்கியங்கள் உறுதுணையாக உள்ளன.

துணை நின்றவை

1. திருக்குற்றாலக் குறவஞ்சி மூலமும் உரையும், புலியுர்க் கேசிகன் உரை, எஸ்.கௌமாரீஸ்வரி (பதி), சாரதா பதிப்பகம், சென்னை, ஜூன் - 2009.
2. முக்கூடற்பள்ளு மூலமும் உரையும், டாக்டர் கதிர் முருகு, கௌரா பதிப்பகம், சென்னை, 2019.
3. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி ஏழு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மே - 1998.
4. முக்கூடற்பள்ளு, அருணாச்சலம், மு (பதி.ஆ) தமிழ் நூலகம், தியாகராசர் நகர், சென்னை, 1946.
5. சுற்றுச்சுழல் பாதுகாப்பு, இராமசுந்தரம், நே. ஜோசப் (பதி), தமிழ்ப் பல்கலைக் கழகம். தஞ்சாவூர்.